**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாயம், தேவகோட்டை.**
**முன்னிலை: திருமதி. பா.கலை நிலா, எம்.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /**
**சார்பு நீதிபதி, தேவகோட்டை.**
**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13 ம் நாள்**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண் 62/2020**
**TNSV050010862019**

---------

செந்தில்குமார் ... மனுதாரர்

/ எதிர் /

1. உதிரப்பன் (டிரைவர்)
2. மேலாளர்
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,
   திண்டுக்கல்
3. கிளை மேலாளர்
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,
   காரைக்குடி .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 24.03.2026 ம் தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.B.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.C.ரமேஷ்காந்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும்,

இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்...

## <u>உ த் த ர வு</u>

மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/—த்தை 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்த்தும், தனித்தும் வழங்கும்படியும், வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை முழுமையாய் தரும்வரை 9% வருட வட்டி சேர்த்து செலுத்தும்படியும், இவ்வழக்கின் செலவு தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் வழங்கும்படி கோரி மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166(1) மற்றும் விதி 3 (1) ன் படி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :—</u>**

(i) மனுதாரர் கோயம்புத்தூரில் ஹோட்டலில் காசாளராக வேலை பார்த்து வருகிறார். விபத்தானது கடந்த 23.11.2018 ம் தேதியன்று 12.00 மணியளவில் திருப்பத்தூர் — காரைக்குடி மெயின் ரோடு கும்மங்குளம் பாலம் அருகே நடைபெற்றது. மனுதாரர் கோயம்புத்தூரில் இருந்து அவரது ஊரான ஏ.ஆர்.மங்களத்திற்கு வருவதற்காக TN 57 M 1968 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தில் அமர்ந்து கொண்டு பயணம் செய்து வந்து கொண்டிருக்கும்போது, திருப்பத்தூர் — காரைக்குடி மெயின்ரோடு கும்மங்குளம் பாலம் வரும்போது மேற்படி அரசு பேருந்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்,

கவனக்குறைவாலும், அரசு பேருந்தை ஓட்டியதால் அரசு பேருந்து ஈபி கம்பத்தில் மோதி கும்மங்குளம் பாலத்தில் கவிழ்ந்தது. மேற்படி பேருந்தில் பயணம் செய்த நபர்களுக்கும், பலத்த காயம் ஏற்பட்டது. அதில் பயணம் செய்த மேற்படி மனுதாரர் செந்தில்குமாருக்கு தலையில் பலத்த காயம் மற்றும் வலது கையில் பலத்த காயம் மற்றும் இடுப்பில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. இச்சம்பவத்தை பார்த்த அங்கு பக்கத்தில் நின்ற நபர்கள் பேருந்தில் பயணம் சென்ற நபர்கள் அனைவரையும் 108 ஆம்புலன்ஸில் ஏற்றி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு மனுதாரருக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாமநாதபுரம் N.H Ortho Care தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு மனுதாரர் கடந்த 24.11.2018ம் தேதி முதல் 10.12.2018ம் தேதி வரை உள்நோயாளியாகவும் நாளது தேதி வரை வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகிறார். மனுதாரருக்கு வலது கையில் ஏற்பட்ட பலத்த காயத்திற்கு தையல்கள் போடப்பட்டுள்ளது.

(ii) மனுதாரரின் வருமானத்தை நம்பியே மனுதாரரின் குடும்பத்தினர் இருந்து வருகிறார்கள். மனுதாரர் ஹோட்டலில் காசாளராக வேலை செய்து பிழைப்பு நடத்தி வந்தார். இதன் மூலம் மனுதார் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- பெற்று வந்தார். விபத்தினை தொடர்ந்து மனுதாரர் எந்தவொரு வேலைக்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்து வருகிறார்.

மனுதாரரை தவிர அவரது குடும்பத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய நபர்கள் யாரும் இல்லை.

(iii) மனுதாரர் விபத்திற்கு முன் ஆரோக்கியத்துடனும், நல்ல உடல் திடக்காத்திரத்துடனும், இருந்து வந்தார். மனுதாரருக்கு இடது கையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் கையை நீட்டவோ, மடக்கவோ எந்த ஒரு பொருளையும் தூக்கவோ முடியாத நிலையில் உள்ளார்.

(iv) விபத்தானது TN 57 M 1968 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனரான 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றது. 1ம் எதிர்மனுதாரர் மீது கண்டவராயன்பட்டி காவல் நிலையத்தாரால் குற்ற எண்.148/2019 இதச பிரிவுகள் 279, 337ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(v) விபத்தானது TN 57 M 1968 என்ற பதிவு எண் கொண்ட தமிழ்நாடு பேருந்தை அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றது. 1ம் எதிர்மனுதாரர் அரசு பேருந்தின் ஓட்டுனர் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் விபத்தினை ஏற்படுத்திய அரசு பேருந்தின் முதன்மை அலுவலகம் ஆகும். 3ம் எதிர்மனுதாரர் விபத்தினை ஏற்படுத்திய அரசு பேருந்தின் கிளை அலுவலகம் ஆகும். எனவே, மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ தனித்தோ கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுதாரருக்கு இழப்பீடாக

ரூ.7,00,000/– 1, 2 எதிர்மனுதார்கள் சேர்த்தும் தனித்தும் வழங்ககோரியும், வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை முழுமையாய் தரும்வரை 9% வருட வட்டி சேர்த்து வழங்கும்படியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்:-**

(i) மனுதாரர் தரப்பு மனு தவறானது மற்றும் தவறான சங்கதிகள் உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவை தவறானது என மறுக்கப்படுகிறது. அது மனுதாரரால் நிரூபிக்கக் கடமைப்பட்டது ஆகும். மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வயது, தொழில், சிகிச்சை காலகட்டம், வருமானம், மருத்துவ செலவுகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. எனவே, அதனை உரிய ஆவண சாட்சியத்தின் மூலமும் விபத்து பதிவேட்டின் மூலமும் மனுதாரரே நிரூபிக்கக்கடமைப்பட்டவர் ஆவார். பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரரால் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மேற்கண்ட தொகைகளை மனுதாரர் மோட்டார் வாகன இழப்பீட்டு சட்டத்தின் கீழ் கோர இயலாது. மனுதாரர்களால் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையானது அதிகப்படியானது, மற்றும் எவ்வித ஆவணத்தின் அடிப்படையிலும் அது கோரப்படவில்லை.

(ii) எதிர்மனுதாரரால், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து

சங்கதிகளும் தவறென மறுக்கப்படுகிறது. மனுதாரர் விபத்து நடந்த விதத்தை முழுமையாக மறைத்து இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக புதிய ஒரு விதத்தில் விபத்து நடைபெற்றதாக குறிப்பிட்டு சொல்கின்றார். எதிர்மனுதாரர் ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை. 21.11.2018 ஆம் தேதி அன்று எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் டிஎன் 57 என் 968 என்ற பேருந்தை பழனியிலிருந்து காரைக்குடிக்கு நிதானமான வேகத்தில் அனைத்து விதமான சாலை விதிகளை பின்பற்றி முறையாக ஹாரன் செய்தும் ஓட்டி வந்தார். இந்நிலையில், எதிர்மனுதாரர் பேருந்தானது திருப்பத்தூர் அருகே சென்று கொண்டிருந்த போது இரவு நேரத்தில் ஒரு மாடு குறுக்கே வந்தது. எனவே, விபத்தினை தவிர்க்கும் வகையில், அதனை வலது புறத்தில் திருப்ப ஓட்டுநர் எத்தனித்தார். அந்நேரத்தில் ஓட்டுநரையும் மீறி பேருந்தானது குப்புற கவிழ்ந்ததில் அதில் இருந்த பயணிகளுக்கு விபத்து ஏற்பட்டது. இது கடவுளின் செயலே ஆகும். எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரால் இந்த விபத்து ஏற்படவில்லை. எதிர்மனுதாரர் ஓட்டுநர் வாகன விபத்துக்கு காரணம் இல்லை என்பதால் அவர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மேற்கண்ட சங்கதிகளை மறைத்து முதல் தகவல் அறிக்கை தவறாக பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் விபத்து சமயத்தின் போது மனுதாரர் அந்தப்

பேருந்தில் பயணிக்கவில்லை. அதில் பயணித்திருந்தால் மனுதாரர் அதற்குரிய பயணச்சீட்டை ஆவணமாக தாக்கல் செய்திருப்பார்.

(iii) மனுவில் மனுதாரர் முதல் தகவல் அறிக்கை எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் மீது குற்ற எண் 78/2018 இதச பிரிவு 279, 379ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில், குற்றவியல் வழக்கு நிலுவையில் இருந்தால் மட்டும் ஒரு நபர் கவனக்குறைவுடன் செயல்பட்டதாக கருத இயலாது. மேலும் குற்றவியல் வழக்கின் தீர்ப்பினால் மட்டும் ஒரு செயல் அந்த நபரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக கருத இயலாது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காயம் அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ள காலக் கட்டம் மற்றும் அவருடைய தொழில் மற்றும் அவருடைய ஊனம் குறித்து மறுக்கப்படுகிறது. அவை மனுதாரராலேயே நிரூபிக்கத்தக்கவை ஆகும். மனுதாரருக்கு சாதாரண காயம் மட்டுமே ஏற்பட்டுள்ள நிலையில், அவர் இழப்பீடு அதிகப்படியாக கோரியுள்ளார்.

(iv) மனுதாரர் / கோருரிமையாளர் ஊனத்தின் அடிப்படையிலும் தனக்கு வருமான இழப்பு ஏற்பட்டதாகவும் இரு வேறு தலைப்புகளின் கீழ் ஒரே நேரத்தில் இழப்பீடு கோர இயலாது. எனவே, அது நிலை நிற்கத்தக்கதல்ல. அதன் அடிப்படையிலேயே இம்மனுவானது தள்ளுபடிக்குரியத்தக்கதாகும். மேலும் மனுதாரர் கோரியுள்ள வட்டி விகிதம் அதிகப்படியானது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள

இம்மனுவானது தள்ளுபடிக்குரியத்தக்கதாகும்.

4) **<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சங்கதிகளின் அடிப்படையிலும் சட்டத்தின் அடிப்படையிலும் தள்ளுபடிக்குரியத்தக்கதாகும். எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டவைத் தவிர மற்றவை தவறென மறுக்கப்படுகிறது. மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள விபத்து ஏற்படுத்திய வாகனமானது மதுரை மண்டலத்திற்கு உட்பட்டதாகும். எனவே, இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரருக்கு ஏதேனும் இழப்பீடு கொடுக்க நீதிமன்றம் நிர்ணயத்தால் அது மதுரை மண்டலத்தை சார்ந்த டி.என்.எஸ்.டி.சிக்கு மட்டுமே பொருந்தும். எனவே, இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடிக்குரியத்தக்கதாகும்.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில்,

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடந்தது ?
2. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?
3. அப்படியானால் எவ்வளவு கிடைக்கத்தக்கது?

6) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மனுதாரர்

தரப்பில் டாக்டர் பெரோஸ்கான் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரது தரப்பில் ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கணேசன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரரின் ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**8) <u>பிரச்சனை எண் 1 :</u>**

மனுதாரர் செந்தில்குமார் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவரது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து, மனுவில் உள்ள சங்கதிகளை எடுத்து சொல்லியுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில் கண்டவராயன்பட்டி காவல் நிலைய குற்ற எண்.78/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகலை ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பத்தூரில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுதாரரின் வழக்கானது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, ம.சா.ஆ.3 காயச் சான்றிதழ், ம.சா.ஆ.5 மெடிக்கல் பில்கள், ம.சா.ஆ.6 எக்ஸ்–ரே, இ.சி.ஜி. ம.சா.ஆ.7, ம.சா.ஆ.8

மருத்துவமனை விடுவிப்பு சான்றிதழ், சிகிச்சை புகைப்படங்கள் ம.சா.ஆ.9, சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட் ம.சா.ஆ.10 ஆகியவை மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

9) ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் சம்பவத் தினத்தன்று கடந்த 23.11.2018 ம் தேதி 12.00 மணியளவில் TN 57 M 1968 எண்ணுள்ள அரசு போக்குவரத்து பேருந்து காரைக்குடி போனபோது கும்மங்குடி பெரிய பாலம் அருகே முன்னால் சென்ற பஸ்ஸை முந்த மனுதாரர் சென்ற பஸ்ஸின் டிரைவர் அதிவேகமாக ஓட்டிச் சென்று ரோட்டின் தெற்கு பக்கம் உள்ள EP போஸ்டில் மோதி தெற்கு பக்கத்தில் உள்ள பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 குற்ற இறுதி அறிக்கையின்படி மனுதாரருக்கும் அவ்விபத்தில் காயம் ஏற்பட்டதால் அவர் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்கண்ட விபத்தில் மனுதாரருக்கு தலையில் பலத்த காயம் மற்றும் வலது கையில் பலத்த காயம் மற்றும் இடுப்பில் பலத்த காயங்கள் ஏற்பட்டு அவர் உடன் மனுதாரர் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு, முதல் உதவி செய்யப்பட்டு, மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் NH Ortho Care தனியார் மருததுவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து, 24.11.2018 ம் தேதி 10.12.2018 ம் தேதி வரை உள்நோயாளியாகவும், நாளது தேதி வரை வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருவதாகவும், ம.சா.ஆ.3 ன் அடிப்படையில் தெரிய வருகின்ற நிலையில், இவ்விபத்தானது அரசு

பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் கவனக்குறைவால் ஏற்பட்டதாக ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 ன் அடிப்படையில் தெரிய வருகிறது. இதனை உறுதிபடுத்தும் வகையில், திருப்பத்தூர் காவல் நிலைய குற்ற எண் 78/2018 ன் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டு, அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் மூலமாக விபத்து ஏற்பட்டது தெரிய வருகிறது. எனவே அரசு பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பது தெரிய வருகிறது.

10) எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தானது அரசு பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை எனவும், விபத்தை தடுக்க முற்படும்போது ஏற்பட்டது என்றும் எனவே, எதிர்மனுதாரர் ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்ற ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. எனினும் அதனை மெய்ப்பிக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி, சாட்சியம் வழங்கப்படவில்லை. எனவே, விபத்து குறித்து மனுதாரரின் வாய்மொழி சாட்சியங்களுக்கு எதிராகவோ எதிர்மனுதாரருக்கு சாதகமாகவோ குறுக்கு விசாரணை சமயத்திலும் எதிருரையின் அடிப்படையிலும் எந்தவித சங்கதிகளோ வெளிக்கொணரப்படவில்லை என இத்தீர்ப்பாயத்தால் முடிவு காணப்படுகிறது. மேலும் மேற்கண்ட சூழ்நிலைகளை பரிசீலனை செய்யும்போது, அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டு அதனடிப்படையில்

மனுதாரருக்கு காயம் ஏற்பட்டது என்றும், எனவே விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து பிரச்சனை 1க்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>11) பிரச்சனை 2:</u>**

விபத்து நடந்தது 2018 ஆம் வருடம். மனுதாரரின் வயது 35 எனவும், விபத்திற்கு முன்பு மனுதாரர் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருந்து கோயம்புத்தூரில் ஹோட்டலில் காசாளராக வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- வரை வருமானம் பெற்று வந்ததாகவும், மேற்கண்ட விபத்தில் மனுதாரருக்கு இடது கையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் மனுதாரரால் கையை நீட்டவோ, மடக்கவோ எந்த ஒரு பொருளையும் தூக்கவோ முடியாத நிலையில் உள்ளதாகவும், மேலும் மனுதாரருக்கு மேற்படி காயங்களின் விளைவாக பொருளீட்டும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு ரூ.7,00,000/- இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

12) விபத்து சமயத்தில் மனுதாரர் வயது 35 என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2018 ஆம் வருடத்தில் மனுதாரரின் வயது 35 என இத்தீர்ப்பாயத்தால் முடிவு காணப்படுகிறது.

13) மனுதாரர் கோயம்புத்தூரில் ஹோட்டலில் காசாளராக வேலை பார்த்து மாதம் ரூ.20,000/- சம்பளம் பெற்றார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

14) விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் மூலம் அவர் இயற்கையான முறையில் வேலை எதுவும் செய்ய முடியாது என ம.சா.2 மருத்துவர் சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவ் ஊனத்தினால் மனுதாரர் ஏற்கனவே பார்த்த வேலையை பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிய வரவில்லை. எனவே அவ் ஊனத்தினை functional disability ஆக கருத இயலாது.

15) மருத்துவ குழுமம் வழங்கியுள்ள நீ.ம.சாஆ.1 ஊனச் சான்றிதழில் மனுதாரருக்கு தற்காலிக நிரந்தர ஊனம் 20% என காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சதவீதம் அடிப்படையிலேயே ஊனம் கணக்கிடப்படுகிறது. 2018 ம் வருடத்திற்கு 1% வீதத்திற்கு ரூ.5,000/- என்ற நிலையில் அவரது ஊனத்தை 20% என முடிவு செய்து சதவீத அடிப்படையில் இழப்பீடு கணக்கீடு செய்யலாம் என 2021 (1) TNMIC 48 இந்த முன் தீர்ப்புரையின் அடிப்படையில் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே 5000 x 20 = 1,00,000/- என மனுதாரரின் தற்காலிக நிரந்தர ஊனத்திற்கான இழப்பீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கீடு செய்கிறது.

16) ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள காயச் சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.8 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கையில் மனுதாரர் 24.11.2018 முதல் 10.12.2018 வரையில் NH Ortho Care தனியார் மருத்துவமனையில் 17 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு Attender Charges ஆக ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

17) மனுதாரரின் மருத்துவச் செலவுக்காக பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பில்கள் ம.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.72,000/- ஆகும். எனவே மேற்கண்ட பில்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.72,000/-என நிர்ணயிக்கப்படுகிறது.

18) மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என ம.சா.2 ன் வாயிலாக தெரிய வருகின்ற நிலையில் மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவுகள் உள்ளதாக அவரால் குறிப்பிட்டு சாட்சிய, சான்றாவணங்கள் அளிக்கப்படவில்லை.

19) மனுதாரருக்கு இடகு கையில் ஏற்பட்ட பலத்த காயத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.25,000/- அனுமதிக்கப்படுகிறது.

20) மனுதாரருக்கு போக்குவரத்து செலவாக ரூ.5,000/- அனுமதிக்கப்படுகிறது.

21) மனுதாரருக்கு ஊட்டச் சத்து செலவாக ரூ.10,000/– அனுமதிக்கப்படுகிறது.

22) மனுதாரருக்கு ஆடை மற்றும் பொருள் சேதத்திற்கு ரூ.1,000/– அனுமதிக்கப்படுகிறது.

23) மேலே கண்ட விவாதங்களிலிருந்து இந்த வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றும் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாலும், மனுதாரருக்கு சேர வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனமே கீழ்க்கண்ட கணக்கீட்டின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

| வரிசை எண் | விபரம் | இழப்பீட்டுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | 20% நிரந்தர ஊனத்திற்கு | 1,00,000/– |
| 2 | மருத்துவ பில்களின் அடிப்படையில் | 72,000/– |
| 4 | வலி மற்றும் வேதனைக்கு | 25,000/– |
| 5 | மருத்துவமனையில் உடன் இருந்தோர் செலவு | 10,000/– |
| 6 | ஊட்டச் சத்து மற்றும் பொருள் இழப்பிற்கு | 10,000/– |

| | | |
|---|---|---|
| 7 | போக்குவரத்துச் செலவு | 5,000/- |
| 8 | ஆடை, பொருள் சேதத்திற்கு | 1,000/- |
| 9 | வசதி இழப்பிற்காக | 25,000/- |
| | ஆக மொத்தம் ரூ. | 2,48,000/- |

மேலே கண்ட விவாதங்களிலிருந்து இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றும், எனவே மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,48,000/- கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

இறுதியில் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,48,000/-ஐ மனு கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் (தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அக்காலம் நீங்கலாக) சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு VAN (Virtual Account Number) SCDVKTNSTCDNGL0622020ல் வைப்பீடு செய்து தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) வழக்குரைஞர் கட்டணம் ரூ.9,460/- என்று நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

3) மனுதாரர் ஏற்கனவே செலுத்திய ரூ.372.50/—போக மீதி நீதிமன்றக் கட்டணம் ரூ.1,480/—ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

4) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண் Tr.Cmp 264 to 281 of 2020 M/s.Cholamandalam M/s. General Insurance Company Ltd., Vs.Mr.Ayyanar and Others ல் 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவுப் படி உத்தரவாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டு விட்டது. எனவே தனியாக உத்தரவாணை பிறப்பிக்கப்படாது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 மார்ச் திங்கள் 27ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை
தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>

ம.சா.1 – செந்தில்குமார் ( மனுதாரர்)

ம.சா.2 – டாக்டர் பொரோஸ்கான்

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | -- | டி.எண்.57-எம்-1968 வாகன ஆய்வாளர் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | -- | காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | -- | குற்ற இறுதி அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | -- | மெடிக்கல் பில்கள் | அசல் |
| ம.சா.ஆ.6 | -- | எக்ஸ்-ரே | அசல் |
| ம.சா.ஆ.7 | -- | இ.சி.ஜி | அசல் |
| ம.சா.ஆ.8 | -- | மருத்துவர் விடுவிப்பு சான்று | அசல் |
| ம.சா.ஆ.9 | -- | மனுதாரருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை கோப்பு | அசல் |
| ம.சா.ஆ.10 | -- | எக்ஸ்-ரே | அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:</u>**

எ.ம.சா.1 – கணேசன்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

--இல்லை--

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் :</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | -- | ஊனச் சான்றிதழ் | | அசல் |

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை

தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.